# இயேசு பிறந்த நன் நாளின் நல் வாழ்த்து மடல் 2016

இயேசு பிறந்த நன் நாள் என்பது நம்மை பயணிக்கச் செய்திடும் இன்னும் அதனைத் தொடர்ந்திட வைக்கும் “நம்பிக்கை” என்பதாகும்.

நம்பிக்கை நம் நாட்டிலிருந்து மறைந்திடுமோ? நடக்கும் நிகழ்வுகளைக் காண்கையில் பின் வரும் வினாக்கள் நம்முள் எழுந்திடத்தான் செய்கின்றன.

வறுமைக்கும், தீரா போருக்கும் பயந்த ஏதிலிகளாக வந்திடுவோரைக் கண்டு அச்சத்தினில் நம் நாட்டினுள் வர விடாமல் தடுக்கின்றோமே!

இதனில் எங்குள்ளது நம்பிக்கை?

பல அண்டுகளாக ROM மக்களின் சிக்கல்களைத் தீர்க்காமல் அவர்களை குடிசைப் பகுதிகளுக்கு இடம் மாற்றிக் கொண்டே இருக்கின்றோமே!

இதனில் எங்குள்ளது நம்பிக்கை?

இளைஞர்களிடமும், நடுத்தர வயதினோரிடமும் பணியில்லா திண்டாட்டம் தவிர்க்க இயலாது என்கின்றோமே!

இதனில் எங்குள்ளது நம்பிக்கை?

சகோதரத்துவம், மகிழ்ச்சி, வாழ்வு இவைகளை வெளி கொணர்ந்து சமுகத்தின் சவால்களுக்கு நம்பிக்கை என்னும் இயந்திரத்தைக் கொண்டு தீர்வு காணலாம்.

நம்பிக்கை இல்லாத வெற்றிடத்தினில் விரக்தியும், துயரமும், இறப்பும் தானே குடிபுகும்.

இதனை எல்லாம் காண்கையில் கிறித்துவர்களாகிய நமக்கு சோதனைகள் உண்டாவதும்; சோகங்கள் மனதினில் பதிவதும்; நடப்பவைகள் எதனிலும் நன்மைகள் இல்லை என்னும் மனப் பாங்கும்; எதனிலும், எல்லோரிடமும் அய்யங்கள் வந்திடத்தான் செய்திடும். இருந்தும் இச் சோதனைகளில் இருந்து நாம் விடு படத்தான் செய்வோம்.

இப் பொன்னான இயேசு பிறந்த திரு நாளில் இறைவன் நமக்கு பரிசாக அளிக்கும் நம்பிக்கையினைப் பெற்றிட நம் இதயங்களைத் திறப்போம்.

“நான் உங்களுக்கு ஒரு நற் செய்தியைச் சொல்கிறேன். இதுவே உலக மக்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியினைக் கொடுக்கும். இன்று தாவீது நகரில் உங்களுக்காக ஒரு மீட்பாளர் பிறந்திருக்கிறார். அவரே இயேசு கிறித்து” (லூக்கா 2-10-11)

இந்த நம்பிக்கை தான் நம்மை வாழ்வினில் பயணிக்க வைத்திடும். அன்றியும் அதனில் தொடர்ந்திடவும் செய்திடும்.

நம் நாட்டின் சிக்கல்களை நாம் அறியாதது இல்லை. மேலும் துண்டிக்கப் பட்ட குடும்ப வாழ்வு; பணி இல்லா கொடுமை; பக்கத்து வீட்டினர்; எதிர் வீட்டினர்களால் எழும் சிக்கல்கள்; குடியிருக்கும் ஊரினால் வரும் இடையூறுகள் என எது எப்படி இருப்பினும் குழந்தை இயேசு நமக்கு கொடுத்த “நம்பிக்கை” நாளுக்கு நாள் நற்செய்தியின் உண்மையினையும், ஆற்றலையும் உலகிற்கு உரத்த உரைக்கும் வலிமையினை அளிக்கின்றது.

உங்களுக்கும், உங்களின் குடும்பத்தினர்கள் அனைவருக்கும் எனது இயேசு பிறந்த நன் நாளின் நல் வாழ்த்துக்கள்.

PASCAL DELANNOY

EVEQUE DE St. DENIS EN FRANCE